முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1358

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.06.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. வாழும் ஞானியே வள்ளலே
   வையகம் காத்திட வந்த அண்ணலே
   நாளும் நாளும் மாதவம் பெருக்கி
   ஞானம் என்கின்ற தர்மவேலிதனை
2. வேலிதனை உலகோர்க்கு சக்தியாக
   விரைந்து உலகமெல்லாம் நிரப்பும்படி
   காலனையே தடுத்து இந்த கலியுகத்தில்
   கருணையோடு ஆற்றலாய் செயல்படும் அரங்கனே
3. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் ஆனி மாதம் **03** ம் நாள், **18.06.2023**, ஞாயிற்றுக்கிழமை)

   வரமாக யானே உன்னுள் இருக்க
   வந்துவணங்கி உன் திருவடி பற்றி

4. பற்றியே ஞானம் வேண்டுமென
   பற்றியே பிறவாப்பேறு வேண்டுமென
   உற்றதொரு முழுமை சரணாகதி
   உலகத்தில் கொண்ட மக்களுக்கே
5. மக்களுக்கே இந்த கலியினில்
   மறுமையை வெல்லும் ஆற்றலும்
   மரணத்தையே வெல்லும் மகாசக்தியும்
   மகான் உன் கரம்பட வரமாகக்கிட்டநேரும்
6. நேர்மைகொண்டு உன் தர்மத்தை
   நிலவுலகில் காத்துவரும் மக்களுக்கும்
   வருங்காலங்களில் பிறவாப்பேறு
   வரமாக சடுதி உறுதியாகும்

7. ஆகவே அரங்கன் தேடுகின்ற
   ஆற்றல்மிக்க ஞானவான்களாக அடிபணிந்து அரங்கன்திருவடி பற்றி
   தேடியே தொடர்ந்து அரங்கன் சேவையில்
   தொண்டர்களாகி கலந்து அற்புதம் நடத்திவர
8. வருவோர்க்கெல்லாம் இந்த கலியினிலே
   வரவேற்று வானவர்கள் ஆசி தந்து
   தருவரப்பா ஞானிகள் ஆகும் பெரும் வாய்ப்பை தக்கபடி
   தவராஜன் அரங்கனால் இந்த அற்புதம் அரங்கேறும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—